அ.வ.எண். 176/2015 நாள்:01.03.2022

**பி.சா.1. அவிலாதெரஸ்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

ஆரம்பத்தில் என் கணவருக்கு கூரை வீடு தான் இருந்தது என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்கிய இடத்தை மட்டும் தான் அனுபவித்து வருகிறோம் என்றும் அதை தவிர வேறு எந்த இடமும் அந்த இடத்தில் எங்கள் அனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் சரிதான் நாங்கள் வேலி கட்டியுள்ள இடம் முழுவதையும் அனுபவித்து வருகிறோம். வாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சி நான் கேட்கும் கேள்விக்கு மட்டும் தான் பதில் சொல்ல கடமைபட்டவர் சாட்சி நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிய பிறகு விளக்கம் எதுவும் சொல்ல அவருக்கு உரிமையில்லை என்று சாட்சி கூறிய விளக்கத்திற்கு ஆட்சேபணை தெரிவித்தார் இது குறித்து தீர்ப்பின் போது முடிவு செய்யப்படும். நான் சொல்லுவது போல் அங்கு வேலி எதுவும் இல்லை என்றும் நாங்கள் கிரையம் வாங்கிய இடத்தை தவிர அதிகமாக 2 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றும் அதை மறைக்க வேலி கட்டியுள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் 2 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரமும் சுவாதின பரிகாரமும் அவர்களுக்கு கிடைக்கதக்கது என்றால் நாங்கள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை 22 ஆண்டுகளாக அந்த இடத்தில் வசித்து வருகிறோம். நாங்கள் 2 செண்ட்டில் கட்டியுள்ள வீட்டை இடித்து அந்த இடத்தையும் காலி இடத்தையும் வாதிகளிடத்தில் ஒப்படைக்க கடமை பட்டவர்கள் என்றால் சரியல்ல. நான் வாதிக்குரிய 2 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை மறைக்க பொய்யாக வாக்கு மூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

**இல்லை.**

A DHANASEKARAN

sgs12345
Digitally signed by A DHANASEKARAN
Date: 2022.03.01 13:32:58 -0300

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவையாறு.